IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.239/2024

dated : 19.06.2025

P.W.1

Name கலா

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1வது பிரதிவாதி என் தாயார் 2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் என் சகோதர சகோதரி ஆவார்கள். 1வது தபசில் சொத்து மாடசாமிக்கு பூர்விகமாக பாத்தியப்பட்டது என்பதை காட்டும் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2 வது தபசில் சொத்து பூர்விக சொத்திலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு கிரையம் பெறப்பட்டது என்று காட்ட எந்தவொரு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாடசாமியின் இறப்பு மற்றும் வாரிசு சான்று எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குச் சொத்துக்கள் பூர்விக சொத்துக்கள் என்பதும் பூர்விக சொத்துகளிலிருந்து கிடைத்த வருமானத்தைக் கொண்டு கிரையம் பெறப்பட்டுள்ளது என்பதும் வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் தந்தை திருமலைமுத்து சுயமாக சிந்தித்து செயல்படும் நிலையில் இல்லை என்று நான் கூறுவதற்கு மருத்துவ

ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் என்வசம் உள்ளது. நான் கூறுவது தவறு என்றும் திருமலைமுத்து இறக்கும் வரை தீர்க்கமான மனநிலையிலும், உடல் திறனுடனும் இருந்து வந்தார் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை காட்டும் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து கூட்டு அனுபவத்தில் இருப்பதாக கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. வழக்கில் மொத்தம் 2 சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது தபசில் சொத்து மூன்று இலக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. 1வது தபசில் சொத்தில் 1 , 2 இலக்க சொத்துக்கள் வீடு மற்றும் வீட்டு மனைகள் ஆகும். மேற்படி சொத்துக்களை 2ம் பிரதிவாதிக்கு என் தந்தை 2018 ம் ஆண்டு நன்கொடை ஆவணம் எண்.46/2018 நாள் 05.01.2018 ம் தேதி எழுதி வைத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1வது தபசில் 3வது இலக்கம் மற்றும் 2வது தபசில் சொத்துக்கள் தரிசு நிலம் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களையும் என் தந்தை 05.01.2018ம் தேதி ஆவண எண்.45/2018 ன்மூலம் ஏற்பாடு செய்து வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் கூறியுள்ள அந்த விவரங்களை சரியானதா என்று உறுதி செய்ய ஆவணங்களை நகல் எடுத்து பார்க்கவில்லை. என் தந்தை உயிருடன் இருந்தபோதே 2ம் பிரதிவாதிக்கு ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டார் என்றும் அது எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரைச் சொத்துக்கள் என் தந்தையின் தனிச் சொத்துக்கள் என்றும் அதை அவர் விருப்புறுதி ஆவணம் எழுதி

வைத்துள்ளதால் நாங்கள் பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு சம்மந்தமற்ற ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.06.19 18:06:40 +0530